உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.665/2023

பெயர் :மாரீஸ்கண்ணன்(அ.சா.5)
தகப்பனார் பெயர் :பிச்சை
கணவர் பெயர் :
வயது :33
கிராமம் :அரும்பனூர்
வட்டம் :ஒத்தக்கடை
தொழில் :டைல்ஸ் வேலை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

20.03.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சேதுராமன், அழகுமணி ஆகியோரையும் எனக்கு தெரியும். சேதுராமனுக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் இடையே சண்டை நடந்த விபரம் தெரியுமா என்றால் எனக்கு விபரம் தெரியவில்லை. காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

சண்டையை பற்றி எனக்கு ஒன்றும் தெரியவில்லை. சண்டை நடந்த அன்று இரவு சுமார்7 – 7.30 மணியளவில் கணேசன் ஆஜர் 3வது எதிரி விழுந்து கிடந்தார். அது மட்டும் தான் எனக்கு தெரியும். அழகம்மாள் எனது தாயார் ஆவார். நானும், எனது தாயாரும் கடந்த 26.06.2017 அன்று இரவு சுமார் 7.00 மணியளவில் வீட்டில் இருந்த போது, நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு கிழக்கு புறம் உள்ள கணேசனுடைய வீட்டருகே சத்தம் கேட்டு நானும் எனது தாயார் அழகம்மாளும் வெளியேசெனறு தெருவிளக்கு வெளிச்சத்தில் பார்த்த போது, கணேசன் குடும்பத்தை சேர்ந்த பிரபு, பாலமுருகன் கணேசன் மனைவி வீரம்மாள், ஆண்டி மகன் பாண்டி, பாண்டி மகன் ராமர், வேட்டை மகன் ராஜா, பாண்டி மகன் மணிகண்டன், பாலமுருகன் மகன் சந்தனம், பாக்கியராஜ் மனைவி கற்பகசெல்வி வேட்டை மனைவி பெருமி, ஆண்டி மகன் முத்தன், மற்றும் வேட்டையன் ஆகியோர் மலைச்சாமி

மனைவி சசிகலா, சோனை மனைவி பொன்மொழி, மலைச்சாமி, குருசாமி, அழகுமணி மற்றும் சேதுராமன் ஆகியோரது கையில் கம்பு, கம்பிகளோடு சண்டை நடந்ததாகவும், அதை நானும், என் தாயாரும் பார்த்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி. : இல்லை

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.03.20 14:04:35 +0530

Assistant Sessions Judge

Melur